# மெட்ரோ ரயிலில்
# 44.96 லட்சம் பேர் பயணம்

**சென்னை, பிப். 3–**

மெட்ரோ ரயிலில், 44.96 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம் வரை, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.



இந்த ரயிலில், கொரோனா ஊரடங்கு தளர்வுக்கு பின், செப்., 7ம் தேதியில் இருந்து, ஜன., 31 வரை, 44.96 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். இவ்வாண்டு, ஜன., 1 முதல், 31 வரை மட்டும், 13.43 லட்சம் பேர், மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர். இதில், ஜன., 27ம் தேதியில் மட்டும், 63 ஆயிரத்து, 699 பேர் பயணம் செய்துள்ளனர்.

ரயில் பயணத்துக்கு, 'கியூஆர்' குறியீடு பயன்படுத்தி, டிக்கெட் பெறுபவோருக்கு, கட்டணத்தில், 20 சதவீதம் சலுகை வழங்கப்படுகிறது. இவ்வசதியில், 11.09 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.